கொண்டிருக்கிறார்கள். தேன், காய், கனிகள்தான் அவர்களின் பிரதான உணவாக இருக்கிறது. ஆகவே, அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கின்ற வகையில் தேனீ வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்துவதற்குத் தீவிர முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை ஆய்வு செய்து, தேவைப்படின் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 184, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

184—

தங்கும் விடுதி

***5502—திரு. கே.சி. வீரமணி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஏலகிரியில் சுற்றுலாத் துறையின்மூலம் ஒரு தங்கும் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஏலகிரியில் ரூபாய் 40 இலட்சம் செலவில், மைய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் சுற்றுலாத் துறைமூலம் ஒரு விடுதி கட்டப்பட்டு தற்போது

உள்ளாட்சித் துறை மூலமாக வட்டார வளர்ச்சி அலுவலர்மூலம் 'அமுதம் மலைவாழ் இளைஞர் குழு'விடம் ஒப்படைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதோடு, மாநில அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் ஏலகிரி மலை சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள், கோடை விழா வளாக மேம்பாடு மற்றும் பராமரிப்பிற்காக ரூ.92 இலட்சம் வேலூர் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு, அவை தற்போது பயன்பாட்டிலே உள்ளன என்பதையும் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு, ஒவ்வொரு வருடமும் சுற்றுலாத் துறை மூலமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கோடை விழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது என்பதையும், படகுக் குழாம், செம்மகளிர் சுய உதவிக் குழுமூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதையும் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி அவர்கள்.

திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஏழைகளின் ஊட்டி' என்று அழைக்கப்படக்கூடிய எழில்மிகு ஏலகிரி மலை, சென்னை மற்றும் பெங்களூரு பெரு நகரங்களுக்கு அருகில் அமைந்துள்ள மலை சூழ்ந்த சுற்றுலாத் தலமாகும். இங்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதாலும், பெங்களூரு மற்றும் சென்னையில் கம்ப்யூட்டர் துறையைச் சேர்ந்த பணியாளர்களெல்லாம் வாரம் ஒரு முறை அங்கு ஓய்வெடுக்க வருகை தருவதாலும், வேலூர், ஆம்பூர், வாணியம்பாடி, திருப்பத்தூர், ஓசூர், கிருஷ்ணகிரி போன்ற பகுதிகளில் வாழும் மக்களெல்லாம் அங்கே வந்து விடுமுறையைக் கழிப்பதாலும், அந்தப் பகுதியிலே சுற்றுலாத் துறையின்மூலம் ஒரு தங்கும் விடுதி அமைத்தால் சிறப்பாக இருக்கும். பேரவைத் தலைவரின் உத்தரவின்கீழ் அதைச் சார்ந்த ஒரு கேள்வியைக் கூடுதலாகக் கேட்க அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி, இன்றைக்கு அனுமதியில்லை. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

2012 ஏப்ரல் 27]

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மைய அரசு நிதி உதவியோடு "யாத்திரி நிவாஸ்" என்ற ஒன்று நடைபெற்று வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டபடி மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதிகமான சுற்றுலாப் பயணிகள் இப்போது அங்கே வருவதால், அங்குக் கூடுதலாகக் கட்டடம் கட்டுவதற்கு, அதாவது அதிக சுற்றுலாப் பயணிகள் தங்கக்கூடிய அளவிலே விடுதிகள் கட்டுவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி அவர்கள்.*

திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்திலே இருக்கிற சுற்றுலாத் துறைக்குச் சொந்தமான விடுதி மூடப்பட்டு பாழடைந்து இருக்கிறது. அதை இடித்துவிட்டு, புதிதாகக் கட்டித் தருவதற்கு தமிழக அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-50

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்திலுள்ள சுற்றுலாப் பயணிகள் தங்கக்கூடிய விடுதியில் 4 அறைகள் மட்டும் அலுவலகப் பயன்பாட்டுக்காக இருக்கின்றது. மற்ற அறைகளெல்லாம் சிதிலமடைந்து இருக்கின்றன. கடந்த மாதம் நாங்கள் நேரடியாகச் சென்று அங்கு ஆய்வு செய்திருக்கின்றோம். இந்த நிதியாண்டிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அங்கு புதியதாக, புதுப் பொலிவோடு ஆசிய வளர்ச்சி வங்கித்*

திட்டத்தின்கீழ் அதற்கான நிதியைப்பெற்று, மாநில அரசு நிதி மூலமாகவும் அந்தப் பணியை உடனடியாகச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.*

திரு. ஆர். அருள்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கடையூர், வைத்தீஸ்வரன்கோவில், திருநள்ளாறு உள்ளிட்ட ஆன்மிக நவக்கிரக ஸ்தலங்களுக்கும் மற்றும் பூம்புகார், தரங்கம்பாடி ஆகிய சுற்றுலாத் தலங்களுக்கும் செல்லவேண்டுமானால், மயிலாடுதுறைக்கு இரயில் மூலமாகவோ, பேருந்து மூலமாகவோ வந்து, அங்கிருந்து தினந்தோறும் 500-இலிருந்து 1,000 பேர் அப்பகுதிகளுக்குச் செல்கிறார்கள். ஆகவே, மயிலாடுதுறையை மையப்படுத்தி சுற்றுலாத் துறையின் மூலமாக ஒரு விடுதி கட்டித் தர ஆவன செய்யப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி, திருக்கடையூருக்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றார்கள். 2011-2012 ஆம் நிதியாண்டில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்காக திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணிகள் மிக விரைவிலே தொடங்கப்படவுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அங்கு நவக்கிரக ஸ்தலங்கள் நிறைய இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்றைக்கு முன்தினம் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையிலும் இதுகுறித்துப் பேசினார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக அதிகக் கவனம் செலுத்தி சுற்றுலாப் பயணிகள் குறைந்த கட்டணத்தில் வந்து தங்கக்கூடிய வகையிலே விடுதிகள் கட்டுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையின்பேரில், அதனைத் துறை பரிசீலனை செய்யும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

2012 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட சிதறால் மலைக் கோயில், சமணர்கள் வந்து செல்லக்கூடிய, மிகவும் பிரசித்திபெற்ற ஒரு மலைக் கோயிலாகும். அங்கு அவர்கள் அடிக்கடி வந்து செல்வதால், ஒரு* Vegetarian *உணவகம் சேர்ந்த தங்கும் விடுதியும்,* rope car *வசதியும் செய்து தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சிதறால் மலைப் பகுதிக்குச் சுற்றுலாத் துறை மூலமாகக் கட்டமைப்பு வசதிகள் செய்யவேண்டுமென்று என்னிடம் நேரடியாகக் கோரிக்கை அளித்திருந்தார்கள். தனிப்பட்ட முறையிலே அறிவிப்பு கொடுக்காததற்குக் காரணம் என்னவென்றால், இன்னும் ஆய்விலே இருக்கிறது என்பதுதான். ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவி மற்றும் மாநில அரசு நிதி உதவியோடு, கன்னியாகுமரி மாவட்டம் முழுவதுமாக உள்ள பல்வேறு சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதோடு* rope car *வசதிபற்றிக் கேட்டிருக்கின்றார்கள். அதையும் ஆய்வு செய்து, அந்தப் பகுதி வனத் துறையின்கீழ் வருகின்றதா? அதற்கு அனுமதி எப்படிப் பெறவேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் ஆய்வு செய்து,* rope car *வசதியைப் பொறுத்தவரையிலே, முடிவு செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. மற்ற பணிகள் அனைத்தையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மிக விரைவிலேயே செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

ஏற்கெனவே சிதறால் மலைப் பகுதிக்குக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், சுற்றுலாத் துறை அமைச்சராக இருந்தவர், அந்த

மாவட்டத்தைச் சேர்ந்தவர்; எந்தப் பணிகளையும் அந்த நேரத்திலே அங்கே செய்யாமல், அரசாணை பிறப்பித்ததோடு அப்படியே விட்டுவிட்டார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் திட்ட மதிப்பீடுகளைத், தயாரித்து, அந்தப் பணிகளைச் செய்து வருகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைவிலே அதைச் செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதிக்குட்பட்ட மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலுக்கு மாதந்தோறும் இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்துசெல்கின்ற காரணத்தினால், மேல்மலையனூர் பகுதியில் சுற்றுலாத் துறை சார்பாக ஒரு தங்கும் விடுதி அமைத்துத் தர, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மேல்மலையனூர் கோயிலுக்குச் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பக்தர்கள் அதிகமாக வருகின்றார்கள் என்பதன் அடிப்படையில், சுமார் 42 இலட்சம் ரூபாய் அளவிலே ஒதுக்கீடு செய்து அடிப்படை வசதிகளான கழிப்பறை வசதிகள், ஓய்வுக்காகத் தங்குமிடம், குடி தண்ணீர் வசதிகளெல்லாம் செய்து கொடுத்து, இப்போது பயன்பாட்டிலே இருக்கின்றது. தங்கும் விடுதியைப்பற்றி ஆலோசனை செய்து, குறிப்பாக, பௌர்ணமி, அமாவாசை ஆகிய நாட்களில் மட்டுமே அங்கு ஆன்மீகச் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகின்றார்கள் என்பதால், அதை ஆய்வு செய்து, கவனத்திலே எடுத்துக்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.*

திரு. ம. கலை அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் தினமும் இலட்சக்கணக்கான மக்கள் குவிந்து கொண்டிருக்கின்றார்கள். வேலூருக்கு அருகில் இருக்கக்கூடிய பொற்கோயிலுக்கு வெளிநாட்டிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வந்தவண்ணம் இருக்கிறார்கள். ஆகவே, வேலூரின் மையப் பகுதியில், பழைய* District Board *கட்டடம் இருந்த இடத்தில், சுற்றுலா வாரியத்தின் சார்பாகத் தங்கும் விடுதியும், உணவு விடுதியும் அமைத்துத் தருமாறு தங்களின்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதன் அடிப்படையிலே, ஏற்கெனவே அங்கே யாத்திரிகர்கள், பக்தர்கள் வந்து தங்கக்கூடிய வகையிலே, ஆண்கள், பெண்களுக்கென்று தனியாக ஓய்வறைகள், கழிப்பறைகள் கட்டப்பட்டு, பொதுப் பணித் துறைமூலமாக அது முடிவுறும்தறுவாயில் இருக்கின்றது. அதேபோல், நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக, சாலை வசதிகள்,* Highmast *விளக்குகளெல்லாம் போடப்பட்டு பயன்பாட்டிலே இருக்கின்றது. பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் அங்கு வந்து தங்குவதற்கான விடுதிகள் வெகு விரைவிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் திறக்கப்பட இருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ம. கலை அரசு, நீங்கள் மூலக் கேள்வி கேட்கவில்லை. துணைக் கேள்வியைத்தான் கேட்டிருக்கிறீர்கள். நீங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறைக்குச் சென்று* clarification-*ஐக் கேட்டுக்கொள்ளுங்கள்.*

வினா வரிசை எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.